யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, நவம்பர் - 2015
# Term Examination, November - 2015

| தரம் :- 13 (2016) | கிறிஸ்தவம் - I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

❖ **மிகப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

01) "பைபிள்" என்ற ஆங்கிலச் சொல் எந்த மொழியில் இருந்து உருவானது?
(1) எபிரேயம் (2) கிரேக்கம் (3) அசீரிய மொழி
(4) பபிலோனியம் (5) இலத்தீன்

02) "இறை ஏவுதல்" என்பதன் பொருள் யாது?
(1) இறைவனின் பேச்சு (2) இறைவனின் வல்லமை
(3) மனிதனுக்குள் செயற்படுதல் (4) மனிதனின் எழுத்து வரம்
(5) இறைவனின் திட்டம்

03) இஸ்ராயேல் மக்கள் தமக்கு இறைவன் வாக்களித்த நாட்டை வெற்றியுடன் கைப்பற்றிய வரலாற்றினைக் கூறும் நூல்
(1) யோசுவா (2) விடுதலைப் பயணம் (3) லேவியர்
(4) இணைச்சட்டம் (5) அரசர்

04) சீனாய் மலை உடன்படிக்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் பாரம்பரியம்
(1) குழுக்கள் (2) எலோகிம் (3) யாவே
(4) இணைச்சட்ட மரபு (5) வாய்மொழி மரபு

05) 1948 இல் நடந்த இஸ்ராயேல் - யோர்தான் போர் நடை பெற்ற இடம்
(1) சாரோன் சமவெளி (2) பெலிஸ்தியச் சமவெளி
(3) செப்பேலா சமவெளி (4) எஸ்திரலோன் புல்வெளி
(5) சமாரியாப் பகுதி

06) இஸ்ராயேல் மக்கள் பபிலோனிய அடிமைத் தனத்தை அனுபவித்த காலம்
(1) 40 வருடங்கள் (2) 30 வருடங்கள் (3) 400 வருடங்கள்
(4) 25 வருடங்கள் (5) 70 வருடங்கள்

07) பாரவோனின் முடியின் மீது இருந்தது.
(1) பாம்பின் சின்னம் (2) கன்றுக் குட்டியின் சின்னம்
(3) சிலுவைச் சின்னம் (4) பிறைச் சின்னம்
(5) நட்சத்திரச் சின்னம்

08) செனத்திரின் சபையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை
(1) 70 (2) 71 (3) 75 (4) 78 (5) 77

09) "உலர்ந்த எலும்புகள் உயிர் பெற்ற காட்சி" பற்றி விளக்கிய இறைவாக்கினர்
(1) எசாயா (2) ஆமோஸ் (3) எசேக்கியேல்
(4) எரேமியா (5) மீக்கா

10) கிறிஸ்தவ விசுவாசத்தின் உயிர் நாடி
(1) இயேசுவின் பணி (2) இயேசுவின் பாடுகள் (3) இயேசுவின் உயிர்ப்பு
(4) இயேசுவின் பிறப்பு (5) இயேசுவின் மரணம்

11) "எகிப்திற்குச் செல்ல நீ அஞ்ச வேண்டாம்" என கடவுள் யாருக்கு காட்சியில் கூறினார்?
(1) பெஞ்சமினுக்கு (2) யோசேப்பிற்கு (3) ஆபிரகாமிற்கு
(4) யாக்கோபிற்கு (5) மோயீசனுக்கு

12) இயேசு முன்வைத்த புதிய கட்டளை
(1) உங்கள் பகைவரை அன்பு செய்யுங்கள்
(2) உங்களைத் துன்புறுத்துவோருக்கு ஆசி கூறுங்கள்
(3) பசியால் இருப்பவர்களுக்கு உணவு கொடுங்கள்
(4) உங்களுக்கு தீமை செய்பவர்களை மன்னியுங்கள்
(5) நான் உங்களை அன்பு செய்தது போல நீங்களும் ஒருவரை ஒருவர் அன்பு செய்யுங்கள்

13) யூதாஸ் இஸ்கரியோத்திற்குப் பதிலாக அப்போஸ்தலர் குழுவில் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்
(1) பர்சபா (2) மத்தியா (3) அல்பேயு
(4) சீமோன் (5) தீத்துஸ்

14) "நான் ஆண்டவரிடம் நம்பிக்கை கொண்டவள் என்று நீங்கள் கருதினால் என் வீட்டுக்கு வந்து தங்குங்கள்" எனக் கூறியவர்
(1) பிலிப்பி நகர லீதியா (2) யோப்பா நகர தபித்தா
(3) கொரிந்து நகர பிரிஸ்கில்லா (4) அனனியாவின் மனைவி சப்பிரா
(5) ரோதி என்னும் இளம் பெண்

15) மெசியா பெத்லேகேமில் பிறப்பார் என வெளிப்படுத்திய இறைவாக்கினர்
(1) எசாயா (2) ஆமோஸ் (3) மீக்கா
(4) எரேமியா (5) எசேக்கியேல்

16) குரு சாதோக்கின் பரம்பரையிலிருந்து வந்தவர்கள் யார்?
(1) எஸ்சேனியர் (2) சமாரியர் (3) மறைநூல் அறிஞர்
4) (பரிசேயர் (5) சதுசேயர்

17) "மாசா" என்னும் எபிரேயச் சொல்லின் பொருள்
(1) சோதித்தல் (2) இரங்குதல் (3) வாதாடுதல்
(4) வினவுதல் (5) போற்றுதல்

18) சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்கும் பொதுவான விடயமாக அமையாதது
(1) ஆலயச் சுத்திகரிப்பு (2) கிறிஸ்துவின் பணி
(3) பிறவி முடவனை குணமாக்கியது (4) அப்பங்கள் பலுகச் செய்தல்
(5) நீரில் நடத்தல்

19) "ஆசீர்களின் கிண்ணம்" என அழைக்கப்படுவது
(1) முதலாம் கிண்ணம் (2) இரண்டாம் கிண்ணம்
(3) மூன்றாம் கிண்ணம் (4) நான்காம் கிண்ணம்
(5) ஐந்தாம் கிண்ணம்

20) தலைமைச் சங்கம் நீதி விசாரணை செய்யும் ஒழுங்கு விதிகள் காணப்படும் நூல்
(1) சட்டநூல் (2) தோரா (3) நீதி மொழிகள்
(4) மிஸ்னா (5) கிஸ்பத்து

21) "ஆகா, திருக்கோவிலை உடைத்து மூன்று நாளில் கட்டி எழுப்புகிறவனே, சிலுவையிலிருந்து இறங்கி உன்னை விடுவித்துக் கொள்" என்று பழித்துரைத்தவர்கள்
(1) படை வீரர்கள் (2) சமாரியர்கள் (3) மறைநூல் அறிஞர்
(4) பரிசேயர் (5) யூதர்கள்

22) இயேசுவை ஏரோது அரசனிடம் கொண்டு சென்ற போது ஏரோது மகிழ்ச்சி அடைந்தமை
(1) அவர் கடவுள் என்பதால்
(2) அவர் யூதரின் அரசன் என்பதால்
(3) அவரைப் பார்ப்பதற்கு மிக ஆசையோடு இருந்தபடியால்
(4) அவருக்கு தனது அதிகாரத்தைக் காட்டுவதற்கு
(5) அவர் கலிலேயன் என்பதால்

23) புற இனத்தவர்களின் திருச்சபை என அழைக்கப்பட்டது
(1) அந்தியோக்கியா (2) செலுக்கியா (3) செசாரியா
(4) கொரிந்து (5) எபேசு

24) எத்தியோப்பிய அண்ணகனுக்கு திருமுழுக்குக் கொடுத்தது யார்?
(1) முடியப்பர் (2) பேதுரு (3) பவுல்
(4) பிலிப்பு (5) யோவான்

25) "இறுதி நாளில் எல்லோர் மீதும் என் ஆவியைப் பொழிவேன்" என்னும் இறைவாக்கை முன்னறிவித்தவர்
(1) இயேசு (2) இறைவாக்கினர் யோவேல்
(3) திருமுழுக்கு யோவான் (4) இறைவாக்கினர் எசாயா
(5) இறைவாக்கினர் மீக்கா

26) திருச்சபையின் முதல் வேதசாட்சி
(1) புனித பவுல் (2) புனித பேதுரு (3) புனித கன்னிமரியாள்
(4) புனித யோவான் (5) புனித ஸ்தேவான்

27) கொர்னேலியுவின் திருமுழுக்குப் பற்றிய நிகழ்வுகள் திருத்தூதர் பணி நூலில் எத்தனை முறை விபரிக்கப்பட்டுள்ளது.
(1) 5 முறை (2) 3 முறை (3) 4 முறை (4) ஒரு முறை (5) 2 முறை

28) பவுல் தனது மறைதூதுப் பயணத்தின் போது ஒன்றரை ஆண்டுகள் தங்கியிருந்து நற்செய்தியை அறிவித்த இடம்
(1) ஏதென்ஸ் (2) எபேசு (3) செசாரியா
(4) கொரிந்து (5) துரோவா

29) புதியேற்பாட்டில் "பரூசியா" என அழைக்கப்படுவது
(1) ஓய்வுநாள் (2) பாஸ்கா காலம் (3) ஆண்டவரின் நாள்
(4) பரிசுத்த ஆவி (5) அருட்கொடை

30) ஆவியின் கொடைகள் அனைத்தும் அருளப்படுவது
(1) சொந்த நன்மைக்காக
(2) ஒவ்வொருவரினதும் உடல் நலனுக்காக
(3) அவர்களது விசுவாசத்திற்காக
(4) பொது நன்மைக்காக
(5) அருள் வாழ்விற்காக

31) எல்லாக் கொடைகளுக்கும் அடிப்படையாக விளங்கும் கொடை எவை எனப் புனித பவுல் கூறுகின்றார்?
(1) ஞானம் (2) அன்பு (3) அறிவு (4) பொறுமை (5) பரிவு

32) திருச்சபையின் அனைத்துப் பொதுச் சங்கங்களுக்கும் முன்னோடியாக அமைந்த சங்கம் எது?
(1) ஜெருசலேம் சங்கம் (2) எபேசு சங்கம்
(3) நிசேயா சங்கம் (4) கல்சடோஸ் சங்கம்
(5) திருந்தெந்தின் சங்கம்

33) தூய பவுல் பிலிப்பியர் 2 : 5 - 11 இல் குறிப்பிடும் கருத்து
(1) படைப்பின் மேன்மை
(2) கிறிஸ்துவின் தலைமைத்துவம்
(3) இரண்டாம் வருகை
(4) இறையருள்
(5) கிறிஸ்துவின் தாழ்ச்சி

34) தூய ஆவியின் மூலம் கிடைக்கும் புதுப்பிறப்பு பற்றி இயேசு உணர்த்தியது
(1) பேதுருவுக்கு
(2) நிக்கதேமுக்கு
(3) திருமுழுக்கு யோவானுக்கு
(4) திருத்தூதர்களுக்கு
(5) கொர்னேலியுவுக்கு

35) உயிர்த்தெழுதலில் நம்பிக்கை இல்லாதவர்கள்
(1) பரிசேயர்
(2) சதுசேயர்
(3) ஏரோதியர்
(4) சமாரியர்
(5) மறைநூல் அறிஞர்

36) இறைவனின் மீட்பு "பிற இனத்தவரின் இருள் அகற்றும் ஒளி" எனக் குறிப்பிடப்படுவது
(1) மத்தேயு நற்செய்தியில்
(2) மாற்கு நற்செய்தியில்
(3) லூக்கா நற்செய்தியில்
(4) யோவான் நற்செய்தியில்
(5) திருத்தூதர் பணியில்

37) யோவான் நற்செய்தியில் காணப்படும் நான்கு தரிசனங்களுள் அல்லாதது
(1) மகதலா மரியாவுக்கு கல்லறை அருகில்
(2) சீமோனுக்கு
(3) தோமையர் தவிர்ந்த சீடர்களுக்கு மேலறையில்
(4) சீடர்களுக்கு தோமையாருடன் மேலறையில்
(5) சீடர்களுக்கு திபேரியாக் கடலருகே

38) சமுதாயத்தில் பகிரங்கப் பாவிகளாகக் கருதப்பட்டவர்கள்
(1) சுங்கவரி அறவிடுவோரும், தொழுநோயாளிகளும்
(2) புற இனத்தவர்களும், ஆயக்காரரும்
(3) விபச்சாரிகளும், தொழுநோயாளிகளும்
(4) சுங்கவரி அறவிடுவோரும், ஆயக்காரரும்
(5) விபச்சாரிகளும், ஆயக்காரரும்

39) நீங்களோ திருச்சட்டம் அறியாதோர் மூலம் அவரைச் சிலுவையில் அறைந்து கொன்றீர்கள்" இங்கு திருச்சட்டம் அறியாதோர் என்பது
(1) இஸ்ராயேலர்
(2) யூதர்கள்
(3) மறைநூலறிஞர்
(4) உரோமையர்
(5) பரிசேயர்

40) புனித பவுல் எக் குலத்தைச் சேர்ந்தவர்
(1) தாவீதின் குலம்
(2) பெஞ்சமின் குலம்
(3) யோசேப்பு குலத்தில்
(4) கிரேக்க குலத்தில்
(5) சமாரியர் குலத்தில்

41) அரேயோப்பாகு மன்றம் காணப்பட்ட இடம்
(1) கொரிந்து
(2) பெரேயா
(3) ஏதென்ஸ்
(4) தெசலோனிக்கா
(5) பிலிப்பி

42) "இயேசு கட்புலனாக கடவுளது சாயல் படைப்பனைத்திலும் தலைப்பேறு" எனப் பவுல் எடுத்துக் கூறுவது
(1) கொலோசேயருக்கு
(2) கொரிந்தியருக்கு
(3) எபேசியருக்கு
(4) பிலிப்பியருக்கு
(5) கலாத்தியருக்கு

43) இயேசுக் கிறிஸ்து இறை அருளின் வரலாற்றுச் சின்னம் என்றால் அவரது வரலாற்று அடையாளமாக அமைவது

(1) பாடுகள் (2) மரணம் (3) உயிர்ப்பு
(4) திருச்சபை (5) திருச்சிலுவை

44) பொதுச் சங்கம் ஒன்றைக் கூட்டுவது, அதனை நடாத்துவது, அனுமதிப்பது என்னும் பணிகளுக்குப் பொறுப்பாய் இருந்தவர்

(1) கருதினால்மார் (2) திருத்தந்தை (3) உரோமைய ஆளுநர்
(4) அப்போஸ்தலர்கள் (5) வத்திக்கான் பிரதிநிதி

45) "மறை சாட்சிகளின் இரத்தம் திருச்சபையின் வித்தாகும்" எனக் கூறியவர்

(1) புனித அம்புறோசியார் (2) புனித ஜேறோம்
(3) புனித கிளமென்ற் (4) புனித அத்தனாசியார்
(5) புனித தெர்த்தூலியன்

46) இயுத்திக்கேய பேதகத்தை கண்டித்துக் கூட்டப்பட்ட சங்கம்

(1) திருத்தெந்தின் சங்கம் (2) கல்சடோன் சங்கம்
(3) வத்திக்கான் சங்கம் (4) எருசலேம் சங்கம்
(5) நிசேயா சங்கம்

47) இணைத் திருமுறை நூல்களுக்கும், யூத நூல்களுக்கும் இடையே உள்ள தொடர்பு பற்றி முதன் முதலில் எடுத்துக் கூறியவர்

(1) புனித அத்தனாசியார் (2) புனித ஜஸ்டின்
(3) புனித ஜேறோர் (4) புனித பசில்
(5) புனித சிறில்

48) பின்வருவனவற்றுள் கல்வியினுடைய வாதமாக அமைவது எது?

(1) இறையருளைப் பெறுவதற்கு ஒவ்வொருவரும் தனித்தனியே செயற்பட வேண்டும்
(2) மீட்புக் கிடைப்பது விசுவாசத்தினால் அல்லது நம்பிக்கையினால் மட்டுமே ஆகும்.
(3) மீட்பு இறைவனிடமிருந்து பெறுகின்ற கொடையே தவிர நற்செயல்களின் வழி உரிமை கோரும் ஒன்றல்ல.
(4) உலகம் தொடங்கியது முதல் மீட்புக் கிடைப்போர் அல்லது கிடைக்காமலிருப்போர் எவரென்பதை இறைவன் தீர்மானித்துள்ளார்.
(5) மனிதன் பாவத்துக்கு அடிமையானதால் தனது மீட்டைப் பெற்றுக் கொள்ள தன்னால் முடியாது.

49) ஆண்டவரின் இறுதி இரவுணவு தனி நினைவு கூரல் மட்டுமே என்றும் திருப்பலியில் பெறும் நற்கருணை வழியாக உண்மையாகக் கிறிஸ்துவைப் பெறுவதில்லை என்றும் வாதிட்ட சீர்திருத்த வாதி

(1) சுவிஸ்கிலி (2) ஜோண் கல்வின்
(3) மாட்டீன் லூதர் (4) எட்டாவது ஹென்றி
(5) பீற்றர் அபேலார்ட்

50) நிசேயா பொதுச் சங்கம் எதற்காகக் கூட்டப்பட்டது?

(1) தேவதாய் வணக்கத்திற்கு எதிராக
(2) ஆரிய பேதகத்திற்கு எதிராக
(3) மசதோனியப் பேதகத்திற்கு எதிராக
(4) நெஸ்தோரியப் பேதகத்திற்கு எதிராக
(5) இயுத்திக்கேயப் பேதகத்திற்கு எதிராக